**உள்ளூர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டம் - 2023**

---

உள்ளூர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 மே 14 ஆம் திகதிய 6371–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 04 மாகாணங்களின் மாகாண சபைகள் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சமூகங்களுக்குப் பதிலளிக்கக்கூடிய மற்றும் கணக்களிப்பொறுப்புடன் சேவைகளை வழங்குவதற்கு உள்ளூராட்சி சபைகளின் திறன்களை வலுப்படுத்துவதும், பங்குபற்றும் மாகாணங்களின் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதும் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 17,665.63 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 100.65 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 12,222.41 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 4,220.98 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 23.65 மில்லியன் மிகுதி தொகை ஐரோப்பிய ஒன்றியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூன் 30 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 திசெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டக் காலப்பகுதி 2024 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 2.3.3 பந்தி | பொதுச் சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர், அவரது/அவளது முக்கிய பதவியில் பணியாற்றும் போது பதிற்கடமை அடிப்படையில் சேவைக்கு விடுவிக்கப்படலாம். எனினும், சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்கள் பிரதிப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டு சம்பளமாக ரூபா 683,000 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | வடமத்திய மாகாணத்தின் மேலதிக கொடுப்பனவு அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்தத் தொகை செயற்திட்டத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை என்று NCP இன் உள்ளூராட்சி ஆணையாளருக்கு புறநெகும செயற்திட்ட பணிப்பாளர் தெரிவித்தார். | சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்ட சம்பளத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக்களின் கூட்டம் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 03 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன. | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக்களின் கூட்டங்கள் தொடர்ந்து நடாத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| உள்ளூராட்சி திட்டமிடல் முறைமையை வலுப்படுத்துதல், உள்ளூர் சேவைகள் மற்றும் பொருளாதார உள்கட்டமைப்பு ஆதரவு மற்றும் நிறுவன அபிவிருத்தி ஆகிய கூறுகளின் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றம் 80 சதவீதம், 70 சதவீதம் மற்றும் 85 சதவீதம் ஆக இருந்த போதிலும் உண்மையான முன்னேற்றம் முறையே 45 சதவீதம், 66 சதவீதம் மற்றும் 30 சதவீதம் ஆகும். | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | அனைத்து குறித்துரைக்கப்பட்ட தரப்பினரின் நலன்களை அதிகப்படுத்தும் வகையில் செயற்திட்ட அமுல்ப்படுத்தல் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| பல காரணங்களால் (உபகரணங்கள் வழங்கப்படவில்லை, சட்ட தகராறுகள், மின் கசிவு, சம்பந்தப்பட்ட பதவியணியினர் இல்லாதமை, மின்சாரம் வழங்காதமை, வடிவமைப்பு தோல்வி, கடைகளுக்கு கேள்வி கோரப்படாமை) ரூபா 402.22 மில்லியன் தொகையான 23 சொத்துக்கள் வட மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு 5 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரை விளைவற்று இருந்தன. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | சொத்துக்களை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **செயற்திட்ட செயற்பாடுகள் கையேட்டின் 5.3 ஆம் பந்தியுடன் இணங்காதமை**<br><br>சமூக கணக்காய்வு குழுக்களை அமைப்பதில் ஆகக்குறைந்தது 50 சதவீதம பெண்களின் பங்களிப்பு இருக்க வேண்டியதுடன் 02 அடிப்படை பரிமாற்றங்களை விடுவிப்பதற்கான இரண்டாவது அளவுகோலின் பிரகாரம் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபையின் பொதுக் கூட்டத்தின் மூலம் குறித்த குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். கணக்காய்விற்கு தகவல்களை சமர்ப்பித்த 67 நிறுவனங்களில் 04 நிறுவனங்களில் சமூக கணக்காய்வு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்காதமையும், 27 நிறுவனங்களில் பெண்களின் பங்கேற்பு 50 சதவீதம ஐ விட குறைவாக இருந்தமையும், 47 நிறுவனங்கள் பொதுக் கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்படாமல் இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அது போலவே, 50 சதவீதம இற்கும் குறைவான பெண்கள் பங்கேற்பு உள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் இந்த செயற்திட்டம் இரண்டாவது அடிப்படை பணப் பரிமாற்றத்தை விடுவித்திருந்தது. | 2வது பகுதிக்கு விடுவிப்பதற்கு முன்னர் 05 தகுதியான அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் 19 தொற்றுநோய் போன்ற தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக சில உள்ளூராட்சி சபைகளால் தெளிவான கணக்காய்வு அபிப்பிராயத்தைத் தவிர ஒரு அளவுகோலை நிறைவேற்ற முடியவில்லை. இந்தச் சூழலில், மக்களின் தேவைகள் மற்றும் விருப்பத்தை பூர்த்தி செய்வதற்கு நிதிகள் விடுவிக்கப்படுகிறதால் பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட உப செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான 2வது அடிப்படை பரிமாற்றங்களை செயற்திட்டம் விடுவித்துள்ளது. முன்னைய ஆண்டிற்கான தெளிவான கணக்காய்வு அபிப்பிராய அளவுகோலைப் பூர்த்தி செய்யாமல் LAs இற்கு 2வது அடிப்படை பரிமாற்றத்தை செயற்திட்டம் ஒருபோதும் விடுவிப்பதில்லை. | செயற்திட்ட செயற்பாட்டுக் கையேட்டின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ராஜாங்கனை பிரதேச சபை புத்தளம் சந்தியில் அரசாங்க காணியில் ரூபா 47,545,091 கிரயத்தில் BT2 மற்றும் BT3 இன் கீழ் 08 கடைகளுடன் கூடிய வணிக வளாகத்தை நிர்மாணித்திருந்த போதிலும், கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர் காணியின் உரிமைத்துவம் மாற்றப்படவில்லை. 2005 ஆம் ஆண்டில் பிரதேச சபைக்கும் தனியார் தரப்பினருக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பிரதேச சபையினால் வழங்கப்பட்ட நியமங்களுக்கு அமைய இந்த காணியில் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | காணியின் உரிமைத்துவத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடைகள் அமைத்து வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் இது தொடர்பாக தனிப்பட்ட தரப்பினர் சட்ட வழக்கை தொடர்ந்திதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் வழக்குக்காக ரூபா 15,000 (வாதி ஒருவருக்கு) தொகை உள்ளூராட்சி சபை நிதியில் இருந்து செலுத்தப்பட்டது. எனினும், காணியின் உரிமைத்துவத்தை தீர்க்காமல் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டதால் நிர்மாணிக்கப்பட்ட வணிக வளாகத்தை முழுமையாக குறித்துரைத்த நோக்கங்களுக்காக பயன்படுத்த முடியவில்லை. | | |
| (இ) | மிஹிந்தலை பிரதேச சபை, PT-1 செயற்திட்டத்தின் கீழ், கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளுக்கான தெரு விளக்குகளை வழங்குவதற்காக, 05 கம்பனிகளிடமிருந்து 40 தெரு விளக்குகளுக்கு விலைகள் கோரப்பட்டு ரூபா 539,070 குறைந்த விலையை சமர்பித்திருந்த கம்பனியிடம் இருந்து 2021 திசெம்பர் 23 இல் அவை கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2022 சனவரி 19 அளவில் 03 தெரு விளக்குகளும் இயங்கவில்லை என்று உள்ளூர்வாசிகள் சபைக்கு தெரிவித்திருந்தனர். எனினும் உத்தரவாதக் காலப்பகுதியின் கீழ் மின்குமிழ்களை கொள்வனவு செய்யாத காரணத்தினால் பிரதேச சபையால் அந்த மின்குமிழ்களை மாற்ற முடியவில்லை. | -மேற்படி- | TEC மற்றும் PC என்பன தொழில்முறை கவனிப்பில் செயற்பட வேண்டும். |
| (ஈ) | நொச்சியாகம பிரதேச சபையானது கட்டுப்பட்வெவ பிரதேசவாசிகளுக்கு குடிநீரை வழங்குவதற்கான நீர் செயற்திட்டத்தை ரூபா 36,904,177 கிரயத்தில் அமுல்ப்படுத்தியிருந்தது. இச் செயற்திட்டம் தொடர்பாக கிணறு மற்றும் நீரேற்று நிலையம் நிர்மாணிக்கப்பட்ட காணி பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்துடன் தனியார் தரப்பினரால் பயன்படுத்தப்பட்ட காணி உள்ளதுடன் அவரது சம்மதத்துடனும், நொச்சியாகம பிரதேச செயலாளரின் எழுத்துமூல அனுமதியுடனும் இந்த நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட காணியின் பகுதி கணக்காய்வு திகதி வரை முறையாக பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | செயற்திட்டங்களைத் தொடங்குவதற்கு முன்னர் காணி கையகப்படுத்துதல் போன்ற பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(உ)** | **ஏரிக் கரை வீதி, புன்னக்குடா வீதி மற்றும் திருகோணமலை வீதி ஆகிய இடங்களில் நகரக்கூடிய கடைகளை நிறுவுவதன் மூலம் சிறிய அளவிலான வணிக சமூகங்களை வலுவூட்டுதல்.** | | |
| | • ஒவ்வொன்றும் 20 அடி நீளமுள்ள ஏழு கொள்கலன்கள் கொள்வனவு செய்யப்பட்டு, ஒவ்வொரு கொள்கலனும் 10.0'x8.0'x8.0' அளவுள்ள 2 கடைகளாக ரூபா 2,399,736 சராசரி கிரயத்தில் வடிவமைக்கப்பட்டு 14 கடைகள் ரூபா 16,798,152 மொத்த கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. 40 அடி நீளம் கொண்ட அவை 2 கொள்கலன்களை இணைத்து 3 இடங்களில் வைக்கப்பட்டன. எனினும் இச் செயற்திட்டத்தில் காத்தான்குடி நகர சபையினால் 40 அடி நீள கொள்கலன் கொள்வனவு செய்யப்பட்டு 10.0'x8.0'x8.0' அளவுள்ள 4 கடைகள் ரூபா 2,493,670 மொத்த கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. எனினும், ஒவ்வொன்றும் 20 அடி நீள 6 கொள்கலன்களுக்குப் பதிலாக, ஒவ்வொன்றும் 40 அடி நீள 3 கொள்கலன்கள் கொள்வனவு செய்யப்பட்டு வணிக வளாகம் நிர்மாணிக்கப்பட்டிருந்தால், ஏறாவூர் நகர சபை ரூபா 6,964,517 தொகையை சேமித்திருக்க முடியும். | -மேற்படி- | பெறுகை செயன்முறை மூலம் பொருளாதார நலன்களை பெற்றுக்கொள்வதற்கான நோக்கம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| | • இந்த ஒப்பந்த வேலைக்காக ஒப்பந்ததாரருக்கு (M/S ஆரம்ஜீ குழு) ரூபா 2,519,723 தொகை VAT ஆக செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஏறாவூர் நகர சபையால் செலுத்தப்படும் VAT குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் VAT பெறப்பட வேண்டும். |

**3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| கடன் உடன்படிக்கையின் 02 ஆம் பட்டியலின் உறுப்புரை (இ) இன் பிரகாரம் 04 மாகாண சபைகளுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து PIU's உம் உரிய மாகாண சபைகளின் கீழ் நிறுவப்பட்டுள்ளன. செயற்திட்டச் செயற்பாட்டுக் கையேட்டின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றன, மேலும் அனைத்து பிரதம செயலாளர்கள் வாரியாக மாகாண தேசிய வழிநடாத்தல் குழு மற்றும் பிரதம செயலாளர்கள் தேசிய வழிநடாத்தல் குழுவுக்குத் தலைமை தாங்குகிறார்கள். | உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |